பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

18 02 2026 | WEDNESDAY | 12.40 PM

ஆகாஷவாணி

**தலைப்புச் செய்திகள்**

1. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, விசாகப்பட்டினத்தில் இன்று சர்வதேச கடற்படை ஆய்வை மேற்கொண்டார்.

2. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் பங்கேற்றுள்ள ஸ்பெயின் அதிபர் திரு Pedro Sanchez, பிரதமர் திரு நரேந்திர மோடியை இன்று சந்தித்துப் பேசினார்.

3. உலகளாவிய பிரச்சினைகளுக்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் தீர்வுகாண இந்தியா முன்னுரிமை அளிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு அஸ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

4. தமிழகம் உள்ளிட்ட பத்து மாநிலங்களில் காலியாக உள்ள 37 மாநிலங்களவை உறுப்பினர் இடங்களுக்கான தேர்தல் அடுத்த மாதம் 16-ஆம் தேதி நடைபெற உள்ளது.

5. தோஹா சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் யுகி பாம்ரி — ஸ்வீடனின் Andre Goransson இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

.. இனி விரிவான செய்திகள். . .

<<<<<<>>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, விசாகப்பட்டினத்தில் இன்று சர்வதேச கடற்படை ஆய்வை மேற்கொண்டுள்ளார்.

கிழக்கு கடற்படை பிரிவின் மூத்த அதிகாரிகள் குடியரசுத் தலைவரை வரவேற்றனர்.

ஐ என் எஸ் **Sumedha** உள்ளிட்ட போர் கப்பல்களை குடியரசுத் தலைவர் பார்வையிட்டார்.

கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த வெளிநாட்டு போர் கப்பல்களையும் அவர் ஆய்வு செய்தார்.

இந்திய கடற்படை கப்பல்களில் உள்ள பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்து அவர் கேட்டறிந்தார்.

நீர்மூழ்கி கப்பல் மற்றும் விமானம் தாங்கி கப்பல்களையும், சிறிய வகை விமானங்களையம் அவர் பார்வையிட்டார்.

கடலில் தேடுதல் மற்றும் மீட்புப்பணிகளை இன்று மேற்கொள்ளும் போர் கப்பல்கள், ஹெலிகாப்டர்கள், நீர்மூழ்கி கப்பல்கள் ஆகியவற்றின் செயல் விளக்கத்தையும் திருமதி திரௌபதி முர்மு பார்வையிட்டார்.

இந்நிகழ்வின்போது, ஆந்திரப்பிரதேச ஆளுநர் திரு அப்துல் நசீர், முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு, மத்திய அமைச்சர் திரு

ராம்மோகன் நாயுடு, முப்படைகளின் தலைமை தளபதி ஜெனரல் அனில் சௌகான் ஆகியோரும் உடனிருந்தனர்.

இதுபோன்ற சர்வதேச கடற்படை ஆய்வுகள், நட்பு நாடுகளுடன் இணைந்து கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் நடத்தப்படுகிறது.

<<<<<<>>>>>>

ஸ்பெயின் அதிபர் திரு **Pedro Sanchez**, பிரதமர் திரு நரேந்திர மோடியை இன்று புதுதில்லியில் சந்தித்துப் பேசினார்.

பொருளாதாரம், வர்த்தகம், மின்னணு பரிமாற்றம், சுகாதாரம், பருவநிலை சவால்களை எதிர்கொள்வதற்கான திட்டங்கள், கல்வி உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

இருதரப்பு உறவுகள், சர்வதேச மற்றும் மண்டல அளவிலான அரசியல் பொருளாதார விவகாரங்கள் குறித்து அவர்கள் பேச்சு நடத்தினர்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டிற்கு வந்துள்ள பல்வேறு நாடுகளின்

தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களையும் பிரதமர் சந்தித்து பேசி வருகிறார்.

ஃபின்லாந்து பிரதமர், செர்பிய அதிபர், குரேஷிய பிரதமர், பூட்டான் பிரதமர், கஜகஸ்தான் பிரதமர் உள்ளிட்ட தலைவர்களையும் பிரதமர் சந்தித்து பேசுகிறார்.

இன்று காலை கூகுள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி திரு சுந்தர் பிச்சையை, பிரதமர் திரு நரேந்திர மோடி சந்தித்து பேசினார்.

<<<<<<>>>>>>

உலகளாவிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் இந்தியா முன்னுரிமை அளிப்பதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஸ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர், தொழில் நிறுவனங்களின் உற்பத்தியை பெருக்க செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் முன்னுரிமை அளித்து வருவதாக தெரிவித்தார்.

சுகாதாரம், வேளாண், பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் பயன்படுத்தபடும் என்றும் அவுர் கூறினார்.

இந்த தொழில் நுட்பத்தின் பல்வேறு பயன்கள் குறித்து இந்த உசசி மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பாதுகாப்பாக பயன்படுத்துவது குறித்து இதில் விவாதிக்கப்பட வேண்டும் என்றும் திரு அஸ்விணி வைஷ்ணவ் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை முறைப்படுத்தும் பொறுப்பு ஐ நா-வுக்கு இல்லை என்று அதன் பொதுச்செயலாளர் திரு அன்டோனியோ குட்ரஸ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சி மாநாட்டில் பங்கேற்க வந்துள்ள திரு அன்டோனியோ குட்ரஸ், உலக நாடுகளுடன் இதுதொடர்பாக, ஐ நா ஆலோசனை நடத்த திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திற்கான உலகளாவிய ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு உலக மின்னணு கட்டமைப்பின்

மூலம், மூன்று முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த தொழில்நுட்பம் தொடர்பாக ஆய்வு செய்ய, சர்வதேச அளவிலான உயர்மட்ட அறிவியல் வல்லுநர் குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும், இதில் 40 வல்லுநர்கள் உலகெங்கிலும் இருந்து இடம்பெற்றுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த அறிவியல் அறிஞர்கள் குழு, சுதந்திரமாக இதனை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்யும் என்றும், இந்த தொழில்நுட்பத்தால் எழும் சிக்கல்கள் மற்றும் அவற்றை எதிர்கொள்வதற்கான கொள்கை நடைமுறைகள் ஆகியவற்றையும் பரிந்துரைக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்தக்குழுவில் சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கல்விக்கழகத்தின் பேராசிரியர் திரு பலராமன் ரவீந்திரன் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

ஐ நா பொதுச்செயலாளர் திரு அன்டோனியோ குட்ரஸ், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திரமோடி ஆகியேரையும் சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்த உள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் உலகளாவிய மின்னணு ஒத்துழைப்பு ஆகிய தலைப்புகளில் நடைபெறும் விவாதங்களிலும் ஐ நா பொதுச்செயலாளர் பங்கேற்க உள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகம் உள்ளிட்ட பத்து மாநிலங்களில் காலியாக உள்ள 37 மாநிலங்களவை உறுப்பினர் இடங்களுக்கான தேர்தல் அடுத்த மாதம் 16-ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதற்கான அறிவிக்கை வரும் 26-ஆம் தேதி வெளியிடப்பட்டு, வேட்புமனு தாக்கல் தொடங்கும் என்றும், அடுத்த மாதம் 5-ஆம் தேதி வரை வேட்புமனுக்களை தாக்கல் செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை 6-ஆம் தேதி நடைபெறும். வேட்புமனுக்களை திரும்பப்பெற 9-ஆம் தேதி கடைசி நாளாகும்.

மார்ச் 16-ஆம் தேதி காலை 9 மணி முதல், நான்கு மணிவரை வாக்குப்பதிவு நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

பதிவான வாக்குகள் அன்றைய தினம் மாலை ஐந்து மணிக்கு பிறகு எண்ணப்படுகிறது.

தமிழகத்தில் ஆறு மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் வரும் ஏப்ரல் மாதம் 2-ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

<<<<<<>>>>>>

ராமகிருஷ்ண பரமஹம்சரின் பிறந்தநாளையொட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா மரியாதை செலுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ராமகிருஷ்ண பரமஹம்சர், மனித குலத்துக்கு வழிகாட்டியாக தமது வாழ்க்கையை ஆன்மிகப் பாதையில் முன்னெடுத்து சென்றுள்ளதாக கூறினார்.

அவரது போதனைகள் அனைத்து தரப்பினருக்கும் உத்வேகம் அளித்து வருவதாகவும் திரு. அமித்ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பங்களாதேஷின் வெளியுறவுத்துறை அமைச்சராக பதவியேற்றுள்ள டாக்டர் **Khalilur Rahman**-னுக்கு, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இரு நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்த திரு **Khalilur Rahman**-னுடன் இணைந்து செயல்பட ஆவலுடன் இருப்பதாக கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

கிறிஸ்தவர்களின் தவக்காலம் இன்று தொடங்கியதையொட்டி, தேவாலயங்களில் புனித சாம்பல் தினம் அனுசரிக்கப்படுகிறது.

நாகை மாவட்டம் வேளாண்கண்ணி பேராலயத்தில் சாம்பல் புதனையொட்டி, சிறப்பு திருப்பலியும், நற்கருணை ஆராதனையும் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — செல்வன் ஜெபராஜ் - 48 Sec. )***

<<<<<<>>>>>>

அருணாசலப் பிரதேசத்தின் **Walong** வனப்பகுதியில் பரவி வரும் தீயை அணைக்க இந்திய விமானப்படை ஹெலிகாப்டர்கள் ஈடுபட்டு வருகின்றன.

இந்த தீயை அணைப்பதற்காக, ஒரு லட்சத்து **39** ஆயிரத்து **800** லிட்டர் தண்ணீர் பயன்படுத்தப்பட்டதாக இந்திய விமானப்படை கூறியுள்ளது.

நாகாலாந்து **Dzukou** பள்ளத்தாக்குப் பகுதியில் பரவி வரும் தீயை அணைக்க எம்.ஐ. **17** ரக ஹெலிகாப்டர்கள் பயன்படுத்தப்பட்டு உளளதாகவும் விமானப்படை கூறியுள்ளது.

**Japfu** மலைப்பகுதியில் பரவும் தீயை அணைக்க திமாப்பூர் பகுதியில் உள்ள ஏரியில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் தண்ணீர் எடுத்து வரரப்பட்டு தெளித்து, தீயை அணைத்து வருவதாக இந்திய விமானப்படை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் திரு இம்ரான்கான் மீதான ஐந்து வழக்குகளில் அவர் கைது செய்யப்படுவதை நிறுத்தி வைப்பதற்கான ஜாமீனை அந்நாட்டில் உள்ள மாவட்ட நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இதற்கான உத்தரவினை பிறப்பித்த நீதிபதி அடுத்த விசாரணையின்போது திரு இம்ரான் கான் நேரில் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

<<<<<<>>>>>>

தோஹாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் யுகி பாம்ரி — ஸ்வீடனின் **Andre Goransson** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், இந்த இணை **6-2, 6-3** என்ற செட் கணக்கில், துனிஷியாவின் **Moez** — கத்தாரின் **Mubarak Zayid** இணையை வென்றது.

---------------

உலகக் கோப்பை ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று நெதர்லாந்தை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

---------

ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்திற்கு ஜம்மு காஷ்மீர் முன்னேறியுள்ளது.

மேற்குவங்கத்தின் கல்யாணியில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் ஜம்மு காஷ்மீர், 6 விக்கெட் வித்தியாசத்தில் பெங்கால் அணியை வென்று இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

<<<<<<END>>>>>>